தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை–25.

<u>மேற்குறிப்பாணை எண்.10003/டி6/2024, நாள்:23.09.2024</u>

பார்வை: மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.7808/பணியமர்த்தல்/2022, நாள்.28.08.2024 உடன்பெறப்பட்ட அரசாணை (நிலை) எண்:11, நாள்:13.08.2024.

........

பார்வையில் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட அரசாணை, தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு: பார்வையில் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட அரசாணை

24/9/24

கண்காணிப்பாளர்

24.9.24

நகல்:

1. முதல்வர்கள், அனைத்து அரசு பொறியியற் கல்லூரிகள்/ அனைத்து தொழில் நுட்பக் கல்லூரிகள்/ சிறப்புப் பயிலகங்கள்
2. தலைமைப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை
3. அனைத்து தொழில் நுட்பக் கல்விக் கோட்ட செயற்பொறியாளர்கள்
4. இயக்குநரின் மேஜைக்கு
5. கூடுதல் இயக்குநர்(பாலி)
6. கூடுதல் இயக்குநர்(தேர்வு)
7. உதவி இயக்குநர்(நிருவாகம்)
8. இயக்குநரின் நேர்முக உதவியாளர்
9. அனைத்து அலகு அலுவலர்கள்
10. அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள்
11. தொழில்நுட்ப உதவியாளர் (மதிப்பீடு–I) | இயக்கக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**அனுப்புநர்**
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம்,
காமராஜர் சாலை,
சென்னை – 5.

**பெறுநர்**
அனைத்துத் துறை
தலைவர்கள்

ந.க.எண்.7808/பணியமர்த்தல்/2022, நாள் . 28.08.2024.

ஐயா/அம்மையீர்,

பொருள்: மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம் – சென்னை–05 – பணியமர்த்தல் பிரிவு – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத் தேர்வுகள் – முதல் மூன்று முறை எழுதியும் தேர்ச்சி பெறாத அரசுப்பணிகளில் பணிபுரியும் 50 வயதினை கடந்த மாற்றுத்திறனாளிகளுக்கு துறைத்தேர்வுகளிலிருந்து விலக்களித்தல் – அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – தொடர்பாக.

பார்வை:
1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள். 21.06.2024.
2. அரசாணை (நிலை) எண். 11 மாற்றுத்திறனாளிகள் நல(மாதிந–3.1)த் துறை, நாள். 13.08.2024.

-------

பார்வை 1 ல் காணும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரில் 21.06.2024 அன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது :

**"தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத் தேர்வுகளை முதல் மூன்று முறை எழுதியும் தேர்ச்சி பெறாத 50 வயதினை கடந்த பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, அறிவுசார் குறைபாடு மற்றும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு மீண்டும் துறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படும்."**

பார்வை 2ல் காணும் 13.08.2024 நாளிட்ட அரசாணையில், அரசு துறை வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளான பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியவர்கள், புற உலக சிந்தனையற்ற மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட

மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அந்தந்த பதவிகளுக்குரிய துறை தேர்விலிருந்து கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு விலக்கு அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

1. சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 50 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.
2. சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது 3 தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக பணிப்பதிவேட்டில் (Service Register) விவரம் இருக்க வேண்டும் அல்லது இது குறித்த நுழைவு சீட்டுகளை வைத்து சம்பந்தப்பட்ட அலுவலர் விண்ணப்பிக்க வேண்டும்.
3. சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் இந்த சலுகையை அடையத்தக்க அளவிற்கு அவருடைய பணிக்குறிப்புகள் மன நிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும்.
4. இவ்வாணையானது மனிதவள மேலாண்மைத் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

எனவே, அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளான பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியவர்கள், புற உலக சிந்தனையற்ற மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அந்தந்த பதவிகளுக்குரிய துறை தேர்விலிருந்து விலக்களித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை நடைமுறைப்படுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- எம். லக்ஷ்மி
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

//ஆணைப்படி//

துணை இயக்குநர்

**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத் தேர்வுகளை முதல் மூன்று முறை எழுதியும் தேர்ச்சி பெறாத 50 வயதினை கடந்த மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு மீண்டும் துறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல(மாதிந–3.1)த் துறை**

அரசாணை (நிலை) எண்: 11

நாள்: 13.08.2024
குரோதி, ஆடி–28,
திருவள்ளுவர் ஆண்டு, 2055

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 21.06.2024.
2. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் ந.க. எண்.7808/ பணியமர்த்தல் / 2022, நாள். 25.06.2024.

********

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் 21.06.2024 அன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> **"தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத் தேர்வுகளை முதல் மூன்று முறை எழுதியும் தேர்ச்சி பெறாத 50 வயதினை கடந்த பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, அறிவுசார் குறைபாடு மற்றும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு மீண்டும் துறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பிப்பதற்கான உச்ச வயது வரம்பில் (Age Relaxation) 10 ஆண்டுகள் தளர்வு வழங்கப்பட்டு வரும் நிலையில் வேலைவாய்ப்பு பெறும் மாற்றுத்திறனாளிகளில் பெரும்பாலானவர்கள் 40 வயது ஆன நிலையில் பணியில் சேர்வதால், பணிவரன்முறை மற்றும் பதவி உயர்விற்காக அந்தந்த துறைகளால்

(த.பி.பா.)

நடத்தப்படும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது கடினமாக உள்ளதால் பணிவரன்முறை செய்தல் மற்றும் பதவி உயர்வு கிடைக்கப் பெறாமல் உள்ளனர். குறிப்பாக, 50 வயதினை கடந்து அரசு பணியில் உள்ள பார்வைத்திறன், செவித்திறன் பாதிக்கப்பட்ட, கற்றல் குறைபாடு, மனவளர்ச்சி குன்றிய மற்றும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு துறைத் தேர்வுகள் எழுதுவதிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் இவ்வகை மாற்றுத்திறனாளிகள் பணிவரன்முறை மற்றும் பதவி உயர்வு பெற்றிட ஏதுவாக அமையும் எனவும், மேலும் அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் புற உலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளிகளுடன் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அந்தந்த பதவிகளுக்குரிய துறைத் தேர்விலிருந்து சில நிபந்தனைகளுக்குட்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு விலக்களித்து ஆணை வெளியிடுமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று அரசு துறை வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளான பார்வைத்திறன் பாதிப்பு, செவித்திறன் பாதிப்பு, கற்றல் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியவர்கள், புற உலக சிந்தனையற்ற மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்படும் அந்தந்த பதவிகளுக்குரிய உரிய துறை தேர்விலிருந்து கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்து அரசு ஆணையிடுகிறது:-

i. சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 50 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

ii. சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது 3 தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக பணிப்பதிவேட்டில் (Service Register) விவரம் இருக்க வேண்டும் அல்லது இது குறித்த நுழைவு சீட்டுகளை வைத்து சம்பந்தப்பட்ட அலுவலர் விண்ணப்பிக்க வேண்டும்.

iii. சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் இந்த சலுகையை அடையத்தக்க வகையில் அவருடைய பணிக்குறிப்புகள் மன நிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும்.

4. இவ்வாணையானது மனிதவள மேலாண்மைத் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சிஜி தாமஸ் வைத்யன்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து துறை தலைவர்கள் (மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-3.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை-104.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள். (மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை – 09.
மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, சென்னை – 09.
செயலரின் தனிச் செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை,
சென்னை-9.
மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந 1)த் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
16/08/2024